# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

*************

முறையீட்டு மனு எண் 426/2016/பே.2

ஆணை எண். 266/2017/ நாள்–26–11–2017

**திரு டி சீனிவாசன்,**
**முன்னாள் மன்றத் தலைவர்,**
**நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி,**
**காஞ்சீபுரம் மாவட்டம்.** ––– **முறையீட்டு மனுதாரர்.**

**செயல் அலுவலர்,**
**நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி,**
**காஞ்சீபுரம் மாவட்டம்.** ––– **எதிர் மனுதாரர்.**

## ஆணை

காஞ்சீபுரம் மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் திரு டி. சீனிவாசன் என்பவரின் 10.10.2012ம் தேதியிட்ட முறையீட்டு மனு, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். 1656/2013/இ.2/நாள் 10.05.2016 ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்திற்கு 17.07.2016ல் வரப்பெற்றது. அதனை பரிசீலித்து இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 426/2016/பே.2/ நாள்19.05.2016 ல் முறையீட்டு மனுவினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவ (முறையீடுகள் தாக்கல் விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகள் 2015 விதி 6 ல் நிர்ணயிக்கப்பட்டவாறு உரிய படிவத்தில் ரூ 10/–க்கான நீதிமன்ற கட்டண வில்லையுடன் பூர்த்தி செய்து அனுப்பத் தெரிவித்து ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுவினை விதிகளின்படி உரிய முறையில் இம்முறையீட்டு மன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

இருப்பினும் மேற்படி முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்தான விளக்கத்தினை தெரிவிக்க இம்முறைமன்ற நடுவத்தில் 14.03.2017ல் நேரில் ஆஜராகி

விளக்கமளிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண் 426/2016/பே.2/நாள் 27.01.2017ன் மூலம் ஆணையிடப்பட்டது. ஆனால் மனுதாரர் ஆஜராகவில்லை.

இதனிடையே முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலருக்கும் இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 426/2016/பே.2/நாள் 15.12.2016 மற்றும் 22.03.2017 ஆகிய தேதிகளில் ஆணையிடப்பட்டது. அதன்படி திரு பழனி, பேரூராட்சி செயல் அலுவலர், நந்திவரம் கூடுவாஞ்சேரி தனது கடித நாள் 12.09.2017 ல் தனது அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

பேரூராட்சி செயல் அலுவலர், நந்திவரம் கூடுவாஞ்சேரி அவர்களின் நேரடி விளக்கத்தினை பெறும் வண்ணம் இம்முறைமன்ற நடுவத்தில் தனது விளக்கத்தினை அளிக்க 12.09.2017ல் நேரில் ஆஜராக இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண் 426/2016/பே.2/நாள்02.08.2017ல் ஆணையிடப்பட்டது. இம்முறைமன்ற நடுவ ஆணைக்கிணங்க திரு பழனி, செயல் அலுவலர், நந்திவரம் கூடுவாஞ்சேரி நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினையும் இம்முறைமன்ற நடுவத்தில் 12.09.2017ல் பதிவு செய்துள்ளார்.

மேலும் தற்போதைய பேரூராட்சி செயல் அலுவலர், நந்திவரம் கூடுவாஞ்சேரி திரு முனியாண்டி என்பவரும் தனது வாக்குமூலத்தினை 12.09.2017ல் இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

14.03.2017ம் தேதியன்று முறையீட்டு மனுதாரர் தனது தரப்பிலான விளக்கத்தினை அளிக்க இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகாததோடு அதற்கான எந்த விளக்கமும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனுதாரரால் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறிருப்பினும் கூடுதல் வாய்ப்பாக, நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு பழனி, மற்றும் தற்போதைய செயல் அலுவலர் திரு முனியாண்டி ஆகியோரின் வாக்குமூல நகல்கள், மற்றும் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க கடித நகல் ஆகியவற்றினை முறையீட்டு மனுதாரருக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 426/2016/பே.2/நாள் 21.09.2017 ன் மூலம் அனுப்பிவைத்து மேற்படி வாக்குமூலம் மற்றும் விளக்க அறிக்கை மீதான ஆட்சேபணை மற்றும் விளக்கங்களை ஒரு வார காலத்திற்குள் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது. அவ்வாறு கூடுதல் வாய்ப்பளிக்கப்பட்டும் மனுதாரர் தனது எந்தவிதமான ஆட்சேபணை / விளக்கத்தினையும் நாளது தேதி வரை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை. அனைத்தையும் பரிசீலிக்கப்பட்டதில் மேற்படி முறையீட்டு மனுதாரர் தரப்பில் கூறிக்கொள்ள முகாந்திரம் ஏதும் இல்லை எனக் கருதி முறையீட்டு மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர்**

-//உத்திரவின்படி- அனுப்பப்படுகிறது//-

செயலாளர்.

பெறுநர்

1.திரு டி. சீனிவாசன்,
முன்னாள் மன்றத் தலைவர்,
நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி,
காஞ்சீபுரம் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி,
காஞ்சீபுரம் மாவட்டம்.